பிரஸார் பாரதி

<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

15 04 2024 12 40

திங்கட்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. மக்களவைத் தேர்தல் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் பிரச்சாரம நாளை மறுநாள் நிறைவடைய உள்ள நிலையில் அரசியல் தலைவர்கள் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

2. நாடு முழுவதும் இதுவரை நாலாயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்களை தேர்தல் பறக்கும் படையினர் கைப்பற்றி இருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது,

3. ஜனநாயகத்தைக் பாதுகாக்க மிகப்பெரிய போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் சொத்துவரி. குடிநீர் வரி உட்பட அனைத்து வரிகளையும் திமுக அரசு உயர்த்தி மக்களை சிரமத்திற்கு உட்படுத்தி வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தமிழகம் உட்பட நாடு முழுவதும் 102 தொகுதிகளில் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் அரசியல் தலைவர்கள் இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

வேட்பாளர்களும் வீடு வீடாகச் சென்று வாக்குகளை சேகரித்து வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி இன்று மாலை நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே அகஸ்தியர் பட்டியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி மக்களவைத் தொகுதிகளில் போட்டியிடும் பிஜேபி மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து அவர் வாக்கு சேகரிக்கிறார்.

இதற்கிடையே காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி இன்று நீலகிரி மாவட்டம் கூடலூரில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், ஜனநாயகத்தைக் காக்க மிகப்பெரிய போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறினார்.

ஒரே நாடு ஒரே தலைவர் என தவறாக நாட்டை வழி நடத்த பிரதமர் திரு நரேந்திரமோடி முயற்சிப்பதாக அவர் குற்றம்சாட்டினார்.

முன்னதாக திரு ராகுல்காந்தி பிரச்சாரத்திற்காக கூடலூருக்கு பயணம் செய்த ஹெலிகாப்டரை தேர்தல் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை நடத்தினர்.

திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் இன்று சென்னை கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி இன்று காஞ்சிபுரத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், திமுக ஆட்சியில் அரிசி உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

சொத்துவரி. குடிநீர் வரி உட்பட அனைத்து வரிகளையும் திமுக அரசு உயர்த்தி மக்களை சிரமத்திற்கு உட்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் இன்னும் சில நாட்களில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் நாடு முழுவதும் இதுவரை நாலாயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது அதிகபட்சமாக ராஜஸ்தானில் 778 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்துள்ளதாக அது கூறியுள்ளது.

அதற்கு அடுத்த படியாக குஜராத் மாநிலத்தில் 605 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இதுவரை 460 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாட்டு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன.

சென்னையில் தேர்தல் ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாவட்ட தேர்தல் அதிகாரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று சென்னையில் வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசினார்.

*( சவுண்ட்பைட் - ராதாகிருஷ்ணன் ) ---35 செகண்ட்*

[]<<<>>>[]

நாடு முழுவதும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலும் இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

திருவள்ளூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவி, மாணவியர் ஒவ்வொருவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

( *சவுண்ட்பைட் - மாணவ மாணவி ) –30 செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று பணி புரியும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காக சுமார் 58 கோடி ரூபாயை மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.,

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஆறு ஊழியர்கள் பணியில் ஈடுபடுவார்கள் என்றும், அவர்களுக்கு ஊதியம் வழங்க இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதை உறுதி செய்யும் விதத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திரு ரமேஷ் **Bais** கலந்து கொண்டார்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட கையெழுத்து விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி வைத்து தமது முதல் கையெழுத்தை பதிவு செய்தார்.

**[]<<<>>>[]**

ராணுவ தலைமை தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே நான்கு நாள் பயணமாக உஸ்பெக்கிஸ்தான் நாட்டுக்கு இன்று புறப்பட்டுச் சென்றார்.

இந்த பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்புகள் குறித்து விவாதிக்கப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் மனோஜ் பாண்டே, அந்நாட்டு ராணுவ தலைமை தளபதியை சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையேயான ராணுவ ஒத்துழைப்பு குறித்தும் விவாதிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் மூவாயிரத்து 880 மீட்டர் உயரத்தில் உள்ள அமர்நாத் குகைக்கோவிலை தரிசிப்பதற்கு இந்த ஆண்டுக்கான யாத்திரை வரும் ஜூன் மாதம் 29-ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் மாதம் 19-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

52 நாட்கள் நடைபெறவுள்ள இந்த யாத்திரைக்கான முன்பதிவு இன்று தொடங்கப்பட்டுள்ளதாக அமர்நாத் கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த யாத்திரை இரண்டு பாதைகள் வழியே நடைபெறுகிறது.

48 கிலோமீட்டர் தூரம் கொண்ட **Nunwan** - பெஹல்காம் பாதை வழியாகவும், மற்றொன்று **Baltal** 14 கிலோமீட்டர் தூரம் கொண்ட செங்குத்து பாதை வழியாகவும் செல்ல முடியும்.

அமர்நாத் குகைக் கோவிலுக்குச் செல்லும் பயணம் மிகவும் சவாலானது என்றும், பாதை நெடுகிலும் பனி சூழ்ந்து காணப்படும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இஸ்ரேலுக்கும் - ஈரானுக்கும் போர் சூழல் நிலவி வரும் நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆண்டனி பிளிங்டன், ஜோர்டான், சௌதி அரேபியா, துருக்கி, எகிப்து மற்றும் இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் தொலைபேசிய மூலம் தொடர்பு கொண்டு மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து விவாதித்தார்.

இதற்கிடையே அமெரிக்க அதிபர் திரு ஜோபைடன் ஜி-ஏழு நாடுகளின் தலைவர்களுடன் தொலைபேசிய மூலம் தொடர்பு கொண்டு நிலவரம் குறித்து விவாதித்தார்.

மேற்காசிய பகுதியில் ஏற்பட்டு வரும் போர் சூழல் தவிர்க்கப்பட வேண்டுமென்று அமெரிக்க அதிபரும், வெளியுறவுத்துறை அமைச்சரும் வலியுறுத்தியுள்ளனர்.

காஸாவில் நிலவி வரும் சூழலை கருத்தில் கொண்டு இஸ்ரேல் - பாலஸ்தீன நாடுகள் அரசியல் ரீதியான தீர்வுகளை காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்க செனட் உறுப்பினர்களுடன் திரு ஜோ பைடன் ஈரான் - இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதல் குறித்து விரிவாக விவாதித்ததாகவும், அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் திரு ஆண்டனியோ குட்டரஸ், ஐ நா பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்களிடம் மேற்காசிய பகுதியில் பதற்றம் நிலவுவதை தவிர்க்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இதற்கிடையே வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர், ஈரான் மற்றும் இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சண்டையை தவிர்த்து. அரசியல் ரீதியிலான தீர்வுகளை எட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மேற்காசிய பகுதியில் நிலவும் சூழல் இந்தியாவுக்கு கவலை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோகன்பெஹான் அணி – மும்பை அணியை எதிர்த்து ஆடுகிறது.,

இப்போட்டி கொல்கத்தாவில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உலகக் கோப்பை ஒற்றையர் பிரிவு டேபிள் டென்னிஸ் போட்டி சீனாவின் மக்காவோ-வில் இன்று தொடங்குகிறது.

வரும் 21-ம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் தலா 48 பேர் இதில் பங்கேற்கின்றனர்.

மகளிர் பிரிவில் இந்தியாவின் மனிகா பத்ராவும் ஸ்ரீஜா அகுலாவும் விளையாடவுள்ளனர்.

***End of News***